RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 311 | நவம்பர்.11 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## கூட்டணிக்கு விருப்பம் தெரிவித்தும் கண்டு கொள்ளாத விஜய் - விரக்தியில் அமமுக



சென்னை, நவ.11-

அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தவெக வுடன் கூட்டணி வைக்க தொடர்ந்து விருப்பம் தெரிவித்து வரும் நிலையில், தவெக தலைவர்கள் கண்டுகொள்ளாதது அமமுகவினரை விரக்தியில் ஆழ்த்தியுள்ளது.

தமிழகத்தில் 2026ல் நடைபெறும் சட்டப் பேரவை தேர்தலுக்கு அனைத்து கட்சிகளும் தயாராகி வருகின்றன. இந்த தேர்தலில் புதிய வரவாக நடிகர் விஜயும் களமிறங்குவதால், கூடுதல் பரபரப்பு தொற்றிக்கொண்டுள்ளது. கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்துக்கு பிறகு ஒரு மாதமாக வெளியே வராமல் இருந்தார் விஜய்.

கூட்ட நெரிசலுக்கு தவெகவையும் விஜய் யையும் பல கட்சிகளும் குறை கூறிய நிலையில், தவெக தரப்பு அடக்கியே வாசித்தது. அதிமுக, பாஜக கட்சிகள் விஜய் மீது தவறு இல்லை என்று கூறி வந்தன. இதனால், அதிமுக கூட்டணிக்கு விஜய் செல்வார் என்று பேச்சுகள் எழுந்த நிலையில், சமீபத்தில் நடைபெற்ற தவெக பொதுக்குழு கூட்டத்தில் விஜய் தான் முதல்வர் வேட்பாளர் என நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அதிமுக, பாஜக கட்சிகள் ஏமாற்றம் அடைந்துள்ளன.

அதிமுகவுடன் பாஜக கூட்டணி அமைத்த நிலையில், டிடிவி தினகரனை எதிரியாகக் கருதும் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, கூட்டணியில் தினகரன் நீடிப்பதை விரும்பவில்லை. அதன் பிறகு பிரதமர் மோடி, அமித் ஷா ஆகியோர் தமிழகம் வந்தபோதுகூட தினகரனுக்கு அழைப்பு இல்லை. சூழலை உணர்ந்து கொண்ட தினகரன், பாஜக கூட்டணியில் இருந்து வெளியேறினார். பழனிசாமி உறுதியாக இருப்பதால், அதிமுக ஒருங்கிணைப்பு முயற்சிகளிலும் எந்த முன்னேற்றமும் இல்லை.

அதிமுக பாஜக கூட்டணி பக்கமும் கதவடைப்பு, திமுக அணியிலும் சேர முடியாத நிலை. தனித்து நின்றால் தோல்வி என்ற நிலையில், சமீபகாலமாக, 2026 தேர்தலில் விஜய் மாற்றத்தை ஏற்படுத்துவார் என்று தினகரன் கூறி வந்தார். இப்போது, விஜய்யின் வருகை, அதிமுகவை 2026 தேர்தலில் 3ம் இடத்துக்கு தள்ளும் என கூறி வருகிறார். தவெகவுக்கு ஆதரவான கருத்துக்களை கூறுவதன் மூலம் அக்கட்சியுடன் கூட்டணி அமைக்க தினகரன் தொடர்ந்து தனது விருப்பத்தை மறைமுகமாக தெரிவித்து வருகிறார்.

இருப்பினும் தேர்தல் நெருங்கும்போது பார்த்துக்கொள்ளலாம், கொஞ்சம் இழுத்து பிடிப் போம் என்று விஜய் கருதுவதாக, தவெக வட்டாரங்கள் கூறுகின்றன. தங்கள் விருப்பத்தை தெரிவித்தும், விஜய் கண்டுகொள்ளாதது அமமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மத்தியில் விரக்தியை ஏற்படுத்தி இருப்பதாக கூறப்படுகிறது. இருப்பினும் தினகரன், தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் போல தொடர்ந்து விஜய்க்கு தூது அனுப்பி கூட்டணி விருப்பத்தை தெரிவித்து வருவதாகவும், ஆனால் விஜய் இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

## "ஜெயலலிதா மன்னிக்கும் தன்மை கொண்டவர்" கோபியில் செங்கோட்டையன் பேட்டி



ஈரோடு, நவ.11-

ஜெயலலிதா மன்னிக்கும் தன்மை படைத்தவர். உழைப்பவர்களை எவராலும் வீழ்த்த முடியாது என முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்தார்.

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையத்தில் இன்று முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது: அதிமுக என்ற இயக்கம் எம்ஜிஆர் மற்றும் ஜெயலலிதா ஆகிய இரு தலைவர்களால் வளர்த்த இயக்கமாகும். பல்வேறு தியாகங்கள் செய்து தான் அவர்கள் இந்த இயக்கத்தை வளர்த்தனர். பல பேர் நன்றி மறந்து சென்று விட்டனர்.

ஜெயலலிதா மன்னிக்கும் தன்மை படைத்தவர். கடந்த 1989ம் ஆண்டு தனது, நகை பொருட்களை வழங்கி கட்சியை வலிமைப்படுத்தினார். உழைப்பவர்களை எவராலும் வீழ்த்த முடியாது. ஜெயலலிதா வழியில் தொடர்ந்து பயணித்து வருகிறேன். தொண்டர்களை காக்க என்ன செய்ய வேண்டுமோ அந்த பணியை அவர் செய்து வந்தார்.

விரைவில் சோதனைகளை சாதனைகளாக மாற்றுவோம். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்ற அடிப்படையில் நான் 45 ஆண்டு காலம் சட்டப்பேரவை உறுப்பினராக இருந்து மக்களுக்காக பணியாற்றி வருகிறேன். நான் இளவரசர் போல இல்லை. எளிமையாக தான் இருந்து வருகிறேன். உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து வருகிறேன்" என்றார்.

## ஆன்லைனில் எஸ்ஐஆர் படிவங்களை நிரப்பும் புதிய வசதி அறிமுகம்: தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தகவல்

சென்னை, நவ.11-

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான படிவங்களை தேர்தல் ஆணைய இணையதளத்தில் நிரப்பும் வசதி கொண்டுவரப்பட்டுள்ளதாக தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: வாக்காளர்கள் வசதிக்காக இந்தியத் தேர்தல் ஆணையம் தனது அதிகாரப்பூர்வ இணையதளமான https://voters.eci.gov.in ல் எஸ்ஐஆர் படிவத்தை ஆன்லைனில் நிரப்புவதற்கான வசதியை ஏற்படுத்தியுள்ளது.

வாக்காளர்கள் தங்களது பதிவு செய்யப்பட்ட செல்போன் எண் அல்லது வாக்காளர் அடையாள அட்டை எண்ணை பயன்படுத்தி இணையதளம் மூலம் உள் நுழைய பதிவு செய்யப்பட்ட செல்போன் எண்ணுக்கு வரும் ஒரு முறை கடவுச்சொல்லை உள்ளீடு செய்ய வேண்டும். உள்நுழைந்த பின்னர் அந்த இணைய பக்கத்தில் காட்டப்படும் "Fill Enumeration Form" என்ற இணைப்பினை தேர்வு செய்யலாம்.

இசைன் முறை: இந்த வசதியை வாக்காளர் பட்டியலில் உள்ள பெயரும், ஆதார் அட்டையில் உள்ள பெயருடன் பொருந்தும் வாக்காளர்கள் மட்டுமே பயன்படுத்த இயலும். வெற்றிகரமாக உள்நுழைந்த பிறகு வாக்காளர், இணையப்பக்கத்தில் கோரப்படும் தேவையான விவரங்களை நிரப்ப வேண்டும். சரியான விவரங்களைச் சமர்ப்பித்த பிறகு இணைய பக்கமானது இசைன் (e-sign) பக்கத்துக்கு மாறும். அதன் பின்னர் பதிவு செய்யப்பட்ட செல்போன் எண்ணுக்கு ஒரு முறை கடவுச்சொல் அனுப்பப்படும். அந்த ஒரு முறை கடவுச்சொல்லை உள்ளிட்டவுடன், படிவம் வெற்றிகரமாக பதிவேற்றப்படும்.

தங்களது செல்போன் எண்களை பதிவு செய்திருக்கும், மேலும் வாக்காளர் பட்டியல் மற்றும் ஆதார் பதிவுகளில் பெயர் பொருந்தி உள்ள வாக்காளர்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் மூத்த குடிமக்களுக்காக 25 'அன்புச் சோலை' மையங்கள் திறப்பு செயல்படுவது எப்படி?

சென்னை: நவ.11-

மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக, 25 'அன்புச் சோலை' மையங்களை திருச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழக முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழக முதல்வர் ஸ்டாலின் இன்று (நவ.10) திருச்சி, பொன்மலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக 'அன்புச் சோலை' மையங்கள் ஒரு மாநகராட்சியில் இரண்டு வீதம் 10 மாநகராட்சிகளில் 20 மையங்கள், சென்னை பெருநகராட்சியில் 3 மையங்கள் மற்றும் தொழில் மாவட்டங்களான ராணிப்பேட்டை மற்றும் கிருஷ்ணகிரியில் 2 மையங்கள் என மொத்தம் 25 'அன்புச் சோலை' மையங்களை தொடங்கி வைத்தார்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மூலமாக குழந்தைகள், மகளிர், கல்வி பயிலும் மாணவ, மாணவியர், திருநங்கைகள் மற்றும் முதியோர் அனைவரையும் பேணிக் காக்கும் வகையில் பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் சட்டங்கள் இத்துறையின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட முதியோர்களுக்காக முதியோர் இல்லங்கள், ஒருங்கிணைந்த வளாக இல்லங்கள், நடமாடும் மருத்துவ அலகுகள் மற்றும் ஓய்வூதியத் திட்டங்கள் உள்ளிட்ட மூத்த குடிமக்களுக்கான பல்வேறு நலத் திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. முதியவர்கள் அமைதியான, கண்ணியமான மற்றும் நிறைவான



வாழ்க்கையை நடத்துவதை உறுதி செய்து, அத்தியாவசிய வசதிகளை வழங்குவதே இத்திட்டங்களின் நோக்கம் ஆகும்.

மூத்த குடிமக்களுக்கான 'அன்புச் சோலை' மையங்கள்: தமிழகத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் மூத்த குடிமக்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வை உறுதி செய்வதற்காக ஒரு மாநகராட்சியில் இரண்டு அன்புச் சோலைகள் வீதம், மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், திருப்பூர், ஈரோடு, தூத்துக்குடி, வேலூர், தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய 10 மாநகராட்சிகளில் 20 அன்புச் சோலைகள் அமைக்கப்படுகின்றன.

மேலும், 2 தொழில் துறை மாவட்டங்களான ராணிப்பேட்டை மற்றும் கிருஷ்ணகிரி, பெருநகர மாநகராட்சியான சென்னையில் தண்டையார் பேட்டை, சோழிங்கநல்லூர் மற்றும் விருகம்பாக்கம் ஆகிய மூன்று இடங்களில் 'அன்புச் சோலை' மையங்கள் தொடங்கப்பட்டு, இயன்முறை மருத்துவ சேவைகள் (Physiotherapy), யோகா, பொழுது போக்கு அம்சங்கள் மற்றும் நூலகம் போன்றவை வழங்கப்பட்டுள்ளன.

அன்புச் சோலையின் முக்கிய நோக்கங்கள்: முதியோருக்கு வழங்கப்படும் இயன்முறை மருத்துவ சேவைகள், பொழுது போக்கு, திறன் மேம்பாடு நிகழ்வுகள் மூலம் மனமும், உடலும் சுறுசுறுப்புடன் இருக்கச் செய்தல், முதியோர் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொண்டு, சமூக உறவுகளை வலுப்படுத்துதல், ஆண், பெண் இருவரும் வேலை பார்க்கும் குடும்பங்களுக்கு, அவர்களது மூத்த உறுப்பினர்கள் பாதுகாப்பாக பராமரிக்கப்படுவதை உறுதி செய்தல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டு அன்புச் சோலை மையங்கள் செயல்படும்.

அன்புச் சோலையின் சமூக நோக்கம்: அன்புச் சோலை திட்டமானது, முதியோர்களை போற்றும் தமிழ் பாரம்பரியத்தை பிரதிபலிப்பதோடு, முதியோர்களின் பாதுகாப்பையும், நன்முறையில் பராமரிப்பதையும் உறுதி செய்வதால் அவர்களது குடும்பத்தினருக்கு மன அமைதியை ஏற்படுத்துகிறது. இதனால் முழுமையான நிறுவனம் சார்ந்த பராமரிப்பு தேவையை குறைத்தும், குடும்ப பிணைப்பை வலுப்படுத்தவும் உதவுகிறது.

மேலும், வேலைக்கு செல்ல ஆர்வமுள்ள பெண்கள், தங்கள் வீட்டிலுள்ள முதியோர்களை பகல் நேரங்களில் பராமரிக்க இயலாததால் வேலைக்கு செல்ல இயலாத நிலையுள்ளது. எனவே, வேலைக்கு செல்லும் பெண்களுக்காகவும், வேலைக்கு செல்ல ஆர்வமுள்ள பெண்களுக்காகவும், அவர்களது வீட்டு முதியவர்களுக்கு தனிமையில்லாமல் நேரத்தை சிறந்த முறையில் செலவு செய்து, மகிழ்வாக வாழ வழிவகை செய்யும் நோக்கத் தோடும் இம்மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக திருச்சியில் இன்றைய தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில், 25 அன்புச் சோலை மையங்களை காணொலி வாயிலாக முதல்வர் தொடங்கி வைத்து, மூத்த குடிமக்களுக்கு மகளிர் சுய உதவிக் குழுவினரால் தயாரிக்கப்பட்ட சிறு தானிய உணவு வகைகள் மற்றும் சத்துமாவு கொண்ட பெட்டகங்களை வழங்கி, அவர்களுடன் கலந்துரையாடி, கேரம் விளையாடினார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, ரகுபதி, கீதா ஜீவன், எஸ்.எஸ்.சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, ஆ.ராசா, துரை வைகோ, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தூத்துக்குடியில் நடப்பாண்டில் 19 லட்சம் டன் உப்பு உற்பத்தி: விலை குறைவால் உப்பளங்களில் தேக்கம்

தூத்துக்குடி, நவ.11-

நடப்பாண்டில் தூத்துக்குடி மாவட்டத்தில் 19 லட்சம் டன் அளவுக்கு உப்பு உற்பத்தி நடந்துள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். தூத்துக்குடி மாவட்டத்தில் வேம்பார், தூத்துக்குடி, முத்தையாபுரம், முள்ளக்காடு, ஆறுமுகநேரி பகுதிகளில் 20 ஆயிரம் ஏக்கரில் உப்பளங்கள் அமைந்துள்ளன.

இவற்றில் சுமார் 30 ஆயிரம் தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். ஆண்டுக்கு சராசரியாக 25 லட்சம் டன் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. நாட்டின் உப்பு உற்பத்தியில் குஜராத் மாநிலத்துக்கு அடுத்த படியாக தூத்துக்குடி மாவட்டம் உள்ளது.

இங்கு ஜனவரி மாதம் உப்பு உற்பத்திக்கான பணிகள் தொடங்கும். ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை 6 மாதங்கள் தான் உப்பு உற்பத்திக்கான உச்சகட்ட காலங்கள். அக்டோபர் மாதம் வடகிழக்கு பருவமழை தொடங்கியதும் உப்பு சீசன் முடியும். கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை ஜனவரி மாதம் கடைசி வாரம் வரை நீடித்



துள்ளது. இதன் காரணமாக உப்பு உற்பத்திக்கான பணிகள் தாமதமாகவே தொடங்கின.

இந்த ஆண்டு மே 15ம் தேதி வரை மழை குறுகிட்டதால் உப்பு உற்பத்தி சரியாக நடைபெறவில்லை. ஆனால், மே 15ம் தேதிக்கு பிறகு உப்பு உற்பத்திக்கு சாதகமான சூழ்நிலை ஏற்பட்டது. அதன் பிறகு அக்டோபர் 15 வரை உப்பு உற்பத்தி அமோகமாக நடைபெற்றது. கடந்த ஆண்டு 50 சதவீதம் மட்டுமே உப்பு உற்பத்தியாகி இருந்த நிலையில், இந்த ஆண்டு உப்பு உற்பத்தி 75 சதவீதத்தை கடந்துள்ளது. வடகிழக்கு பருவமழை அக்டோபர் 16ல் தொடங்கியதை தொடர்ந்து நடப்பு உப்பு உற்பத்தி சீசன் முடிவுக்கு வந்துள்ளது.

இதையடுத்து உற்பத்தி செய்யப்பட்ட உப்பை மழையில் இருந்து பாதுகாக்கும் வகையில், உப்பளங்களில் உள்ள உப்பு குவியல்களை பிளாஸ்டிக் ஷீட் போட்டு மூடி வைத்துள்ளனர். வடகிழக்கு பருவமழை முழுமையாக முடிவடைந்த பிறகே அடுத்த சீசனுக்கான பணிகள் தொடங்கும். தூத்துக்குடி சிறிய அளவு உப்பு உற்பத்தியாளர் சங்க முன்னாள் செயலாளர் ஏ.ஆர்.ஏ. எஸ்.தனபாலன் 'இந்து தமிழ் திசை' செய்தியாளரிடம் கூறியதாவது: வடகிழக்குப் பருவ மழைக் காலம் தொடங்கி யதையடுத்து தூத்துக்குடி மாவட்டத்தில் உப்பு உற்பத்தி முடிவுக்கு வந்துள்ளது.

மாவட்டத்தில் இந்த ஆண்டு உப்பு உற்பத்தி தாமதமாக தொடங்கினாலும், கடைசி 4 மாதங்கள் நன்றாக இருந்தது. இதனால் இந்த ஆண்டு 75 சதவீதத்துக்கு மேல், அதாவது 19 லட்சம் டன் உப்பு உற்பத்தியாகியுள்ளது.

அதேநேரத்தில் இந்த ஆண்டு இதுவரை சுமார் 7 லட்சம் டன் உப்பு மட்டுமே விற்பனையாகியுள்ளது. 12 லட்சம் டன் உப்பு, உப்பளங்களில் இருப்பில் உள்ளது. குஜராத் உப்பு குறைந்த விலைக்கு கிடைத்ததால், தூத்துக்குடி உப்பு அதிகளவில் தேங்கியுள்ளது. அடுத்த ஆண்டு சீசன் தாமதமாக மார்ச் மாதம் தொடங்கினால், கையிருப்பில் இருக்கும் உப்பு காலியாக வாய்ப்பு உள்ளது.

விலையை பொறுத்தவரை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைந்துள்ளது. கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் ஒரு டன் உப்பு ரூ.3,000 முதல் ரூ.3,500 வரை விற்பனையான நிலையில், தற்போது தரத்தை பொறுத்து ரூ.2,000 முதல் ரூ.2,500 வரையே விலை போகிறது. இந்த விலை அடுத்த மாதம் சற்று உயருவதற்கு வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

செய்தி மற்றும் விளம்பரங்களுக்கு
இணை ஆசிரியர் : க.சந்திரகுமார் 9585323132

# பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பயனடைந்த பயனாளிகள் நிறைந்தது மனம் நிகழ்ச்சியில் வாயிலாக தமிழ்நாடு முதலமைச்சருக்கு தங்களது நன்றியினை தெரிவித்தனர்

பெண் குழந்தைகளுக்கு சம உரிமை மற்றும் பாதுகாப்பை வழங்கும் நோக்கில் தமிழ்நாடு அரசு "பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம்" என்ற சிறப்பு நலத்திட்டத்தை தொடங்கியுள்ளது. இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமானது பெண் குழந்தைகளின் கல்வி, ஆரோக்கியம் மற்றும் எதிர்கால பாதுகாப்பை உறுதி செய்வதாகும். மேலும், குழந்தை திருமணத்தைத் தடுக்கவும், பெண்குழந்தையை குடும்பத்தில் மதிப்புடன் வளர்க்கவும் இந்தத் திட்டம் உதவுகிறது. பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்களில் பிறக்கும் பெண்குழந்தைகளுக்கு அரசு நிதி உதவி வழங்குகிறது. பெண் குழந்தைகளுக்கு அவர்களின் பெயரிலேயே ரூ.25000/ தமிழ்நாடு மின் விசை நிதி நிறுவனத்தில் தொகை சேமிக்கப்படுகிறது. அக்குழந்தைக்கு 18 வயது பூர்த்தியடைந்த பிறகு அந்தத் தொகையை கல்வி அல்லது திருமண நிதியாகப் வட்டியுடன் சேர்த்து பெறலாம். இதன் மூலம் பெற்றோர்கள் பெண் குழந்தையை ஒரு சுமையாகக் கருதாமல், அவர்களை வளர்க்க ஊக்கப்படுத்தப்படுகிறார்கள்.

இந்தத் திட்டம் பெண்களின் கல்வி வளர்ச்சியை



ஊக்குவிக்கிறது. குழந்தை திருமணத்தைத் தடுக்கும் முயற்சிக்கும் இது உதவுகிறது. இதனால் சமூகத்தில் பெண் குழந்தைகளின் நிலைஉயர்ந்து, பாலின சமத்துவம் வலுவடைகிறது. பெண் குழந்தை பாதுகாப்புதிட்டம் என்பது பெண்குழந்தைகளின் எதிர்காலத்தை பாதுகாக்கும் ஒரு அரிய அரசுத் திட்டமாகும். இந்தத்திட்டம் சமூகத்தில் பெண்களுக்கு சமஉரிமை, மரியாதை மற்றும் முன்னேற்றம் கிடைக்க வழிவகுக்கிறது.

பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கடந்த 2021 2025 வரையிலான நான்கரை ஆண்டுகளில் அன்னூர் வட்டாரத்தில் 329 பயனாளிகள், ஆனைமலை வட்டாரத்தில் 322 பயனாளிகள், காரமடை வட்டாரத்தில் 614 பயனாளிகள், மதுக்கரை வட்டாரத்தில் 287 பயனாளிகள், பொள்ளாச்சி வடக்கு வட்டாரத்தில் 234 பயனாளிகள், பொள்ளாச்சி தெற்கு வட்டாரத்தில் 238 பளனாளிகள், சூலூர் வட்டாரத்தில் 393 பயனாளிகள், சுல்தான்பேட்டை வட்டாரத்தில் 163 பயனாளிகள், தொண்டாமுத்தூர் வட்டாரத்தில் 323 பயனாளிகள், கிணத்துக்கடவு வட்டாரத்தில் 182 பயனாளிகள், சர்க்கார்சாமக்குளம் வட்டாரத்தில் 160 பயனாளிகள், பெரியநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் 370 பயனாளிகள், வால்பாறை வட்டாரத்தில் 90 பயனாளிகள், மத்திய மண்டலத்தில் 317 பயனாளிகள், கிழக்கு மண்டலத்தில் 226பயனாளிகள், வடக்கு மண்டலத்தில் 231, தெற்கு மண்டலத்தில் 296, மேற்கு மண்டலத்தில் 277 பயனாளிகள் என வட்டார வாரியாக மொத்தம் 5052 பயனாளிகளுக்கு தலா ரூ.25000/ மதிப்பிலான வைப்புநிதி பத்திரங்கள் சுமார் ரூ.12.63 கோடி பெற்று வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் கடந்த 2021 முதல் 2025 வரையிலான நான்கரை ஆண்டுகளில் 2021-2022 ஆம் நிதி ஆண்டில் 1463 பயனாளர்களுக்கும், 2022-2023 ஆம் நிதி ஆண்டில் 3496, பயனாளர்களுக்கும் 2023-2024 ஆம் நிதி ஆண்டில் 2705, பயனாளர்களுக்கும் 2024 2025 ஆம் நிதி ஆண்டில்



2556 பயனாளர்களுக்கும் 2025 2026 ஆம் நிதி ஆண்டில் நாளது தேதி வரை1205 பயனாளர்களுக்கும் மொத்தம் 11425 பயனாளர்களுக்கு முதிர்வு தொகை பெற்று வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் கீழ் பயனடைந்த பயனாளியான மதியழகன் நகர், கோழிபன்னைக்காடு, சூலூரை சார்ந்த திரு. பழனிசாமி, ராதா தம்பதியர் நிறைந்த மனம் நிகழ்ச்சியில் தெரிவித்ததாவது,

நாங்கள் சூலூரில் வசித்து வருகிறோம். எங்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள். கூலி வேலை செய்துதான் எங்கள் குழந்தைகளை வளர்த்து வந்தோம். சமூக நலத்துறையின் வாயிலாக இரண்டு பெண்குழந்தைகள் காப்போம் திட்டத்தின் கீழ் அவர்கள் சிறுகுழந்தைகளாக இருக்கும்பொழுது விண்ணபித்திருந்தோம். தற்போது 18வயது நிறைவடைந்த என்னுடைய மகள் சீதாலெட்சுமி கல்லூரியில் இளங்கலை பட்டப்படிப்பு படித்து வருகிறாள்.



அவளுக்கு 18வயது நிறைவடைந் ததையொட்டி இரண்டு பெண்குழந்தைகள் காப்போம் திட்டத்தின்கீழ், முதிர்வு தொகையாக ரூ.4,19,000/ வட்டி யுடன் சேர்த்து கிடைத்தது. அத்தொகையை கொண்டு அவளது கல்லூரி ஆண்டு கட்டணம் செலுத்தினோம். எங்கள் மகள் கல்லூரி படிப்பை முழுமையாக முடிப்பதற்கு இந்த தொகை மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. ஏழ்மை நிலையில் வாழும் எங்களை போன்றவர்களுக்கு இத்திட்டத்தை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த, அம்பேத்கார் நகர் வீதி, ஆதிநாராயணபுரம், நீலாம்பூரை சார்ந்த திரு. முருகேசன், செல்வி தம்பதியர் நிறைந்தது மனம் நிகழ்ச்சியில் தெரிவித்ததாவது,

நாங்கள் நீலாம்பூரில் வசித்து வருகிறோம். எங்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள். சமூக நலத்துறையின் வாயிலாக இரண்டு பெண்குழ ந்தைகள் காப்போம் திட்டத்தின் கீழ் அவர்கள் சிறுகுழந் தைகளாக இருக்கும் பொழுது விண்ணப்பி த்திருந்தோம். தற்போது 18வயது நிறைவடைந்த என்னுடைய மகள் ஜெயஸ்ரீ சித்தாதுறையில் இளங்கலை பட்டப்படிப்பு படித்து வருகிறாள்.

அவளுக்கு 18வயது நிறைவடை ந்ததையொட்டி இரண்டு பெண்குழந்தைகள் காப்போம் திட்டத்தின் கீழ் முதிர்வு தொகையாக ரூ.38000/ வட்டியுடன் சேர்த்து பெற்றதாகவும் அத்தொகையை கொண்டு தன்மகளுக்கு இளநிலை பட்டபடிப்புக்கு கல்லூரி ஆண்டு கட்டணம் செலுத்தப்பட்டது. எங்கள் மகள் கல்லூரி படிப்பை முழுமையாக முடிப்பதற்கு இந்த தொகை மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. ஏழ்மை நிலையில் வாழும் எங்களை போன்றவர்களுக்கு இத்திட்டத்தை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். என தெரிவித்தார்.

இதுபோன்று இத்திட்டத்தின் கீழ் ஆயிரகணக்கானவர்கள் பயனடைந்து வருவது பெண்குழந்தைகளின் கல்வி, ஆரோக்கியம் மற்றும் எதிர்கால பாதுகாப்பை உறுதி செய்ய முக்கியபங்காற்றும்.

**தொகுப்பு: ஆ.செந்தில் அண்ணா செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், இரா.சரண் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) கோயம்புத்தூர் மாவட்டம்.**



## தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது

தென்காசி, நவ.11-

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சீ.ஜெயச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பெற்றுக் கொண்டார். கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் திறன் மேம்பாட்டு கழகம் சார்பில் வெற்றி நிச்சயம் என்னும் திட்டத்தின் கீழ் கால்நடை பராமரிப்பு திறன் மேம்பாட்டு பயிற்சியில் கால்நடை வளர்ப்பு அறிவியல் சார்ந்த தொழில்நுட்ப பயிற்சிகள், களப் பயிற்சி மற்றும் செய்முறை வகுப்புகளில் பங்கு பெற்று தேர்ச்சி பெற்ற 19 நபர்களுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் சான்றிதழ்களை வழங்கினார்கள். தொடர்ந்து, இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டா மாறுதல், மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 479 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.தண்டபாணி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) திரு.நம்பிராயர், தென்காசி கோட்ட உதவி இயக்குநர் மரு.வாசு தேவன் மற்றும் கால்நடை மருத்து வர்கள் டாக்டர். ராதாகிரு ஷ்ணன், டாக்டர். ராமசெல்வம், டாக்டர். செல்வகுத்தாலிங்கம் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டம் கோ.புதுப்பட்டியில் ரூபாய் 70 கோடி மதிப்பீட்டில் அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடங்கள் கட்டுவதற்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தனர். இந்திய மருத்துவம் (ம)ஹோமியோபதி துறை ஆணையாளர்விஜயலட்சுமி,இ.ஆ.ப., உடன் உள்ளார்.

## பொதுமக்கள் வாக்காளர் திருத்தம் தொடர்பாக, அந்தந்த சட்டமன்ற தொகுதிக்கென நியமிக்கப்பட்டுள்ள வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்களை குறிப்பிட்டுள்ள அலைபேசி எண்களில் அணுகலாம்

### மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, நவ.11-

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, 01.01.2026 ஆம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு, சிவகங்கை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக, சட்டமன்றத் தொகுதி வாரியாக வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, 184 காரைக்குடி சட்டமன்ற தொகுதிக்கான வாக்காளர் பதிவு அலுவலரான தேவகோட்டை சார் ஆட்சியர் அவர்களை 9445000470 என்ற அலைபேசி எண்ணிலும், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்களான காரைக்குடி, வட்டாட்சியர் அவர்களை 9445000648 என்ற அலைபேசி எண்ணிலும், தேவகோட்டை வட்டாட்சியர் அவர்களை 9445000649 என்ற அலைபேசி எண்ணிலும், காரைக்குடி மாநகராட்சி ஆணையர் அவர்களை 7397382168 என்ற அலைபேசி எண்ணிலும், தேவகோட்டை நகராட்சி ஆணையர் அவர்களை 7397382165 என்ற அலைபேசி எண்ணிலும், காரைக்குடி தனி வட்டாட்சியர் (ச.பா.தி) அவர்களை 9443112659 என்ற அலைபேசி எண்ணிலும், தேவகோட்டை தனி வட்டாட்சியர் (ச.பா.தி) அவர்களை 9488778100 என்ற அலைபேசி எண்ணிலும்,

185 திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்கான வாக்காளர் பதிவு அலுவலரான சிவகங்கை உதவி ஆணையர் (ஆயம்) அவர்களை 9445074593 என்ற அலைபேசி எண்ணிலும், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்களான திருப்பத்தூர் வட்டாட்சியர் அவர்களை 9445000647 என்ற அலைபேசி எண்ணிலும், சிங்கம்புணரிவட்டாட்சியர் அவர்களை 9486672009 என்ற அலைபேசி எண்ணிலும், காரைக்குடி வட்டாட்சியர் அவர்களை 9445000648 என்ற அலைபேசி எண்ணிலும், பொன்னமராவதி வட்டாட்சியர் அவர்களை 9080487553 என்ற அலைபேசி எண்ணிலும், திருப்பத்தூர் தனி வட்டாட்சியர் (ச.பா.தி) அவர்களை 9489429363 என்ற அலைபேசி எண்ணிலும், சிங்கம்புணரி தனி வட்டாட்சியர் (ச.பா.தி) அவர்களை 8925160550 என்ற அலைபேசி எண்ணிலும்,

186 சிவகங்கை சட்டமன்ற தொகுதிக்கான வாக்காளர் பதிவு அலுவலரான சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் அவர்களை 9445000471 என்ற அலைபேசி எண்ணிலும், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்களான சிவகங்கை வட்டாட்சியர் அவர்களை 9445000650 என்ற அலைபேசி எண்ணிலும், காளையார்கோவில் வட்டாட்சியர் அவர்களை 7094610400 என்ற அலைபேசி எண்ணிலும், காரைக்குடி வட்டாட்சியர் அவர்களை 9445000648 என்ற அலைபேசி எண்ணிலும், சிவகங்கை நகராட்சி ஆணையர் அவர்களை 7397382170 என்ற அலைபேசி எண்ணிலும், சிவகங்கை தனி வட்டாட்சியர் (ச.பா.தி) அவர்களை 9442964910 என்ற அலைபேசி எண்ணிலும், காளையார்கோவில் தனி வட்டாட்சியர் (ச.பா.தி) அவர்களை 9965617873 என்ற அலைபேசி எண்ணிலும்,

187மானாமதுரை (தனி) சட்டமன்ற தொகுதிக்கான வாக்காளர் பதிவு அலுவலரான மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நல அலுவலர் அவர்களை 9445477845 என்ற அலைபேசி எண்ணிலும், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்களான மானாமதுரை வட்டாட்சியர் அவர்களை 9445000651 என்ற அலைபேசி எண்ணிலும், இளையான்குடி வட்டாட்சியர் அவர்களை 9445000652 என்ற அலைபேசி எண்ணிலும், திருப்புவனம் வட்டாட்சியர் அவர்களை 9787251048 என்ற அலைபேசி எண்ணிலும், மானாமதுரை நகராட்சி ஆணையர் அவர்களை 9150375470 என்ற அலைபேசி எண்ணிலும், மானாமதுரை தனி வட்டாட்சியர் (ச.பா.தி) அவர்களை 9442329579 என்ற அலைபேசி எண்ணிலும், இளையான்குடி தனி வட்டாட்சியர் (ச.பா.தி) அவர்களை 8778833470 என்ற அலைபேசி எண்ணிலும், திருப்புவனம் தனி வட்டாட்சியர் (ச.பா.தி) அவர்களை 9787793007 என்ற அலைபேசி எண்ணிலும் பொதுமக்கள் வாக்காளர் திருத்தம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அலுவலர்களை அணுகலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

## சிவகங்கை, மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு

சிவகங்கை, நவ.11-

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் பொருளாதாரத்தை முன்னேற்றும் வகையில், நவீன சலவையகங்கள் அமைக்க தமிழக அரசு நிதியுதவியுடன் கூடிய புதுமையான திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. அதன்படி, நவீன சலவையகம் அமைப்பதற்கு தேவையான இயந்திரங்கள், மூலப்பொருட்கள் மற்றும் பிற முன் நிகழ்வுகளுக்கு தேவையான நிதியில் ரூ.3.00 லட்சம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க 10 நபர்களைக் கொண்ட ஒரு குழுவாக செயல்பட வேண்டும். குழு உறுப்பினர்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவர்களாக இருத்தல் வேண்டும். குழு உறுப்பினர்களின் குறைந்தபட்ச வயது வரம்பு 20 ஆகும். குழு உறுப்பினர்களின் ஆண்டு வருமானம் ரூ.1.00 லட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். மேலும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (Ministry of Micro, Small and Medium Enterprises) துறையின் மூலம் பயிற்சி பெற்ற நபர்களை கொண்ட குழுவிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

எனவே, குறிப்பிட்டுள்ள திட்டத்தின் கீழ் பயன்பெற விருப்பமும், தகுதியும் உள்ள குழுவினர், சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தை நேரில் அணுகி பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.

## செந்தில் பாலாஜி உதவியாளர் தொடர்ந்த வழக்கு: அமலாக்கத் துறை பதிலளிக்க உத்தரவு

சென்னை, நவ.11-

முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி மீதான சிறப்பு நீதிமன்ற விசாரணையில் முடிவெடுக்கும் வரை சட்டவிரோத பணப் பரிமாற்ற வழக்கை விசாரிக்கக் கூடாது என தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு நவ.24ம் தேதிக்குள் அமலாக்கத் துறை பதிலளிக்க சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

போக்குவரத்து துறையில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி மோசடி செய்த வழக்கு சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது. இந்த வழக்கின் அடிப்படையில் சட்டவிரோத பணப் பரிமாற்றம் செய்ததாக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, அவரது சகோதரர் அசோக்குமார் உள்ளிட்டோருக்கு எதிராக அமலாக்கத் துறை தொடர்ந்த வழக்கு சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வருகிறது.

இந்த வழக்கில் சாட்சிகளிடம் விசாரணை நடத்தப்பட்டு வந்தது. இந்நிலையில் வழக்கில் குற்றம்சா ட்டப்பட்ட முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி உதவியாளர் கார்த்திகேயன், கணேசன் உள்ளிட்ட இருவர் சிறப்பு நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கில் முடிவெடுக்கும் வரை அமலாக்கத் துறை தொடர்ந்த வழக்கை விசாரிக்கக் கூடாது, விசார ணையை தள்ளி வைக்க வேண்டும் என மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி எஸ்.கார்த்திகேயன் முன்பு விசாரணைக்கு வந்தபோது, வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, இதய சிகிச்சைக்காக அமெரிக்கா சென்ற அவரின் சகோதரர் அசோக்குமார் உள்ளிட்ட 11 பேர் நேரில் ஆஜராகி யிருந்தார்.

அப்போது அமலாக்கத் துறை தரப்பில் சாட்சி விசாரணையை தள்ளி வைக்கக் கோரிய மனு தொடர்பாக பதிலளிக்க அவகாசம் வழங்க வேண்டும் என கோரிக்கை வைக்க ப்பட்டது. இதை யடுத்து உத்தரவிட்ட நீதிபதி மனுவுக்கு பதிலளிக்க அமலாக்கத் துறைக்கு கால அவகாசம் வழங்கி வழக்கின் விசாரணையை நவ.24ம் தேதிக்கு தள்ளிவைத்தார்.



## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது

சேலம், நவ.11-
சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (10.11.2025) நடைபெற்றது. பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணவும், அடிப்படைத் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்திடவும், பெண்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான நடவடிக்கைகள் உள்ளிட்ட பணிகளில் அரசு அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமெனவும், குறிப்பாக பொதுமக்கள் ஒருமுறை வழங்கிய மனுக்கள் மீண்டும் வராத வகையில் மனுவின் மீது உரிய தீர்வு வழங்கப்படுவதை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதி யோர் உதவித்தொகை, இலவச வீட்டுமனைப்பட்டா, பட்டா மாறுதல், சாதிச்சான்று, வேலை வாய்ப்பு, வங்கிக்கடன்கள், கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித் தொகை, உதவி உபகரணங்கள், குடிநீர் வசதி, சாலை வசதி உட்பட அடிப்படை வசதிகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 418 மனுக்கள் வரப்பெற்றன.

மேலும், மாற்றுத்திறனாளிகள் எவ்வித சிரமமும் இன்றி மனுக்களை வழங்கும் வகையில் மாவட்ட ஆட்சியரகத்தின் தரைத் தளத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கென நடத்தப்பட்டு வரும் குறைதீர் முகாமில் வீட்டுமனைப் பட்டா, உதவி உபகரணங்கள், பராமரிப்பு உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து அளிக்கப்பட்ட 9 மனுக்களைப் பெற்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.இரா. பிருந்தா தேவிதெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.ரவிக்குமார் உள்ளிட்ட அரசுத்துறை முதன்மை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) தொடர்பாக, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில்

## கல்லூரி மாணாக்கர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி கொடியசைத்து துவக்கி வைத்தார்



சிவகங்கை, நவ.11-
சிவகங்கை மாவட்டம், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) தொடர்பாக, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் இன்றையதினம் (10.11.2025) சிவகங்கை வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் கல்லூரி மாணாக்கர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, 01.01.2026ஆம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு, சிவகங்கை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பணியின் முதற்கட்டமாக, 27.10.2025 ஆம் தேதி வரை வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள அனைத்து வாக்காளர்களுக்கும், சுய விபரங்கள் பகுதியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள கணக்கெடுப்புப் படிவங்கள் இரட்டைப் பிரதிகளில் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் வருகின்ற 04.12.2025 ஆம் தேதி வரை வாக்காளர்களது இல்லங்களிலேயே வழங்கப்படவுள்ளது.

அந்தவகையில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) தொடர்பாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் (ஙிலிளி) பொதுமக்கள் படிவங்களை எவ்வாறு பெறுவது மற்றும் படிவங்களை பூர்த்தி செய்து உரிய காலத்திற்குள் வழங்குவது ஆகியன குறித்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில், இன்றையதினம் சிவகங்கை அரசு மகளிர் கலைக்கல்லூரி மாணவியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியானது மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப., அவர்களால் கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டது.

இப்பேரணியானது, சிவகங்கை வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் தொடங்கப்பட்டு, நகரின் முக்கிய வீதி வாயிலாகச் சென்று பேருந்து நிலைய பகுதியில் நிறைவு பெற்றது. இப்பேரணியில் சுமார் 160 மாணவியர்கள் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) தொடர்பாக பதாகைகளுடன் கலந்து கொண்டு, பொதுமக்களிடம் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

அதனைத்தொடர்ந்து, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சிவகங்கை நகராட்சி அலுவலகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் ஆகியோர்களிடம் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை, சிறந்த முறையில் உரிய காலத்திற்குள் நிறைவு செய்திட அறிவுறுத்தினார்.

மேலும், பொதுமக்கள் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) தொடர்பாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் (BLO) மேற்கொள்ளப்பட்டு வரும் கணக்கெடுப்பு பணிக்கு முழு ஒத்துழைப்பு நல்கி, பணியினை சிறந்த முறையில் நிறைவு செய்திட உறுதுணையாக இருந்திடல் வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,. இ.ஆ.ப., அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சிகளில், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் செல்வி தே.ஜெஃபி கிரேசியா, சிவகங்கை வட்டாட்சியர் திரு.மல்லிகா அர்ஜுன், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கோவைகேஎம்சிஹெச் மருத்துவமனை சார்பில் வீரியம்பாளையத்தில் புதிய மாநகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டிடம் திறப்பு




கோவை, நவ.11-
கோவை காளப்பட்டி பகுதியில் உள்ளவீரியம்பாளையத்தில் ரூ.2.18 கோடி மதிப்பில் கேஎம்சிஹெச் மருத்துவமனை தனது சமூகப் பொறுப்பு திட்டத்தின் (சிஎஸ்ஆர்) கீழ் புதிய மாநகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டிடம் கட்டி வழங்கியுள்ளது. 7 வகுப்பறைகள் மற்றும் மாணவ, மாணவிகளுக்கான தனி கழிவறைகள் கொண்ட இந்த கட்டிடம்திறந்து வைக்கப்பட்டது.

கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதிராஜ் குமார் கட்டிடத்தை திறந்து வைத்தார். மேயர் ரங்கநாயகி ராமசந்திரன், ஆணையாளர் சிவகுரு பிரபாகரன் துணை மேயர் வெற்றிசெல்வன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கேஎம்சிஹெச் தலைவர் டாக்டர் நல்லா ஜி. பழனிசாமி, துணைத் தலைவர் டாக்டர் தவமணி பழனிசாமி, செயல் இயக்குனர் டாக்டர் அருண் பழனிசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

டாக்டர் நல்லா ஜி. பழனிசாமி, கல்வி மற்றும் சமூக முன்னேற்றத்திற்காக கேஎம்சிஹெச் தொடர்ந்து பணியாற்றி வருவதாகவும், சமீபத்தில் பல ஊர்களில் புதிய பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் விளையாட்டு மைதான நிதியுதவிகள் வழங்கியுள்ளதாகவும் கூறினார்.

டாக்டர் அருண் பழனிசாமி, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இந்த வசதிகளை சிறப்பாகப் பயன்படுத்தி முன்னேற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

## வரி வருவாயிலிருந்து அமெரிக்கர்களுக்கு தலா 2000 டாலர் டிவிடெண்ட் வழங்குவேன்: ட்ரம்ப்



வாஷிங்டன், நவ.11-
கூடுதல் வரிவிதிப்பின் மூலம் அமெரிக்கா டிரில்லியன் கணக்கான டாலர்களை வருவாயாக பெறுவதாகவும், அந்த வருவாயிலிருந்து ஒவ்வொரு அமெரிக்கருக்கும் விரைவில் 2,000 டாலர் ( இந்திய மதிப்பில் தலா ரூ.1.77 லட்சம்) டிவிடெண்ட் (ஈவுத்தொகை) வழங்கப்படும் என்றும் அதிபர் டொனால்டு ட்ரம்ப் உறுதியளித்தார்.

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தனது சமூக ஊடகப் பதிவில், “கூடுதல் வரி விதிப்பை எதிர்ப்பவர்கள் முட்டாள்கள். எனது தலைமையின் கீழ், அமெரிக்கா உலகின் மிகவும் பணக்கார நாடாக, மிகவும் மதிக்கப்படும் நாடாக, பணவீக்கம் இல்லாத நாடாக மாறியுள்ளது. பங்குச் சந்தையில் வரலாறு காணாத உச்சத்தை அமெரிக்க தொட்டுள்ளது.

கூடுதல் வரிகள் மூலம் டிரில்லியன் கணக்கான டாலர்களை அமெரிக்கா வருவாயாகப் பெறுகிறது. விரைவில் எங்கள் மிகப்பெரிய கடனான 37 டிரில்லியன் டாலரை செலுத்தத் தொடங்குவோம். அமெரிக்காவில் முதலீடுகள் மற்றும் தொழிற்சாலைகள் எல்லா இடங்களிலும் அதிகரித்து வருகின்றன.

கூடுதல் வரியிலிருந்து கிடைக்கும் வருவாய், அதிக வருமானம் ஈட்டுபவர்களைத் தவிர ஒவ்வொரு அமெரிக்கருக்கும் விரைவில் தலா 2,000 டாலர் (டிவிடெண்ட் ஈவுத்தொகை) வழங்கப்படும்” எனத் தெரிவித்துள்ளார். இருப்பினும், இந்தப் பணம் எவ்வாறு அல்லது எப்போது விநியோகிக்கப்படும் என்பதைப் பற்றி அவர் எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால், வரிகளிலிருந்து கிடைக்கும் பணம் மக்களுக்கு நேரடியாக பயனளிக்கும் அதே வேளையில் தேசியக் கடனைக் குறைக்க உதவும் என்று அவர் கூறினார்.



## மதுரையில் அனைத்து நாயுடு சங்கங்களின் கலந்தாய்வு கூட்டம்

மதுரை, நவ.11-
மதுரை ஆழ்வார்புரம் பகுதியில் உள்ள மண்டபத்தில், அனைத்து நாயுடு சங்கங்களின் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. தமிழக நாயுடு கூட்டமைப்பு அறக்கட்டளை, தமிழ்நாடு நாயுடு மகாஜன சங்கம், தமிழ்நாடு நாயக்கர் இளைஞர் அமைப்பு, கூடல்நகர் நாயுடு மகாஜன சங்கம், கவுரவா நாயுடு மகாஜன சங்கம், ஜனநாயக மக்கள் ராஜ்ஜியம், தமிழ்வழி மக்கள் பேரவை உள்ளிட்ட பல்வேறு நாயுடு அமைப்புகளை சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டு, அமைப்பின் வளர்ச்சிக்கு தங்களது கருத்துகளை எடுத்துரைத்தனர். வரும் காலங்களில் அனைத்து நாயுடு சங்கங்களும் இணைந்து செயல்படுவது மற்றும் ஒருங்கிணைந்த கோரிக்கைகளை அரசுக்கு முன் வைப்பது என முடிவு செய்யப்பட்டது. மேலும், மாமன்னர் திருமலை நாயக்கர் அரண்மனையில் உள்ள திருமலை நாயக்கர் சிலையை அரசு செலவில் முழுஉருவ வெண்கல சிலையாக மாற்றித்தர வேண்டும். தமுக்கம் மைதானத்திற்கு ராணி மங்கம்மாள் மைதானம் என பெயர் சூட்ட வேண்டும். காந்தி மியூசியம் வளாகத்தில் ராணி மங்கம்மாள் அரண்மனையில் ராணி மங்கம்மாளின் முழுஉருவ வெண்கல சிலை அமைக்க வேண்டும், சமூக வலைதளங்களில் சமுதாயப் பெண்களை இழிவாக பேசி பதிவிடும் நபர்கள் மீது சைபர் குற்றசட்டபடி கைது செய்ய வேண்டும், உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் சங்க மூத்த நிர்வாகிகள் இளைஞர் அணியினர் மகளிர் அணியினர்என ஏராளமான கலந்து கொண்டனர். கூட்டத்திற்கான ஏற்பாடுகளை, தமிழக நாயுடு கூட்டமைப்பு அறக்கட்டளை நிர்வாகிகள் செய்திருந்தனர்.

9.12.2025 அன்று வெளியிடப்படவுள்ள வரைவு வாக்காளர் பட்டியலுக்கான,

## கணக்கெடுப்புப் படிவங்களை பெற்ற வாக்காளர்கள், கணக்கெடுப்புப் படிவத்தினை முழுவதுமாக பூர்த்தி செய்து கையொப்பமிட்டு தொடர்புடைய வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் (BLO) மட்டுமே வழங்கிட வேண்டும்

### மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, நவ.11-
இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, 01.01.2026 ஆம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு, சிவகங்கை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பணியின் முதற்கட்டமாக, 27.10.2025 ஆம் தேதி வரை வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள அனைத்து வாக்காளர்களுக்கும், சுய விபரங்கள் பகுதியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள கணக்கெடுப்புப் படிவங்கள் இரட்டைப் பிரதிகளில் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் வருகின்ற 04.12.2025 ஆம் தேதி வரை வாக்காளர்களது இல்லங்களிலேயே வழங்கப்படவுள்ளது. அப்படிவங்களை அந்த குடும்பத்தில் உள்ள இதர நபர்கள் சார்பாக 18 வயதுக்கு மேற்பட்ட குடும்ப உறுப்பினர் எவரேனும் ஒருவர் அந்த பகுதிக்கான ஙிலிளிக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், கணக்கெடுப்புப் படிவங்களை பெற்ற வாக்காளர்கள், கணக்கெடுப்புப் படிவத்தினை முழுவதுமாக பூர்த்தி செய்து கையொப்பமிட்டு தொடர்புடைய வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் (BLO) மட்டுமே வழங்கிட வேண்டும். இதர நபர்கள் எவரிடமும் பூர்த்தி செய்யப்பட்ட கணக்கெடுப்புப் படிவங்களை வழங்கக்கூடாது.

வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் கணக்கெடுப்புப் படிவத்தின் ஒரு பிரதியைப் பெற்றுக் கொண்டு, அவர்களது ஙிலிளி செயலியில் உள்ளீடு செய்வார்கள். ஒரு பிரதியில் கையொப்பமிட்டு அந்தந்த வாக்காளர்களிடத்திலயே வழங்குவர்.

ஒரு குடும்பத்தைச் சேர்ந்த அனைத்து நபர்களுடைய படிவங்களையும் அக்குடும்பத்தின் மூத்த உறுப்பினர், இதர உறுப்பினர்கள் சார்பாக கையொப்பமிடலாம். கணக்கெடுப்பின் போது, தங்களது குடும்பத்தில் காலஞ்சென்ற உறுப்பினர்கள் பெயர், இரட்டைப்பதிவு, நிரந்தரமாக வெளியூர் சென்றுவிட்ட நபர்கள் குறித்த விபரங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் தெரிவித்திடல் வேண்டும். கணக்கெடுப்புப் பணியின் போது வாக்காளர்கள், கணக்கெடுப்புப் படிவத்தை மட்டும் வழங்கினால் போதும், எவ்வித இதர ஆவணங்களையும் இணைத்து வழங்க வேண்டியதில்லை.

மேலும், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் வழங்கப்படும் பூர்த்தி செய்யப்பட்ட கணக்கெடுப்புப் படிவங்களின் அடிப்படையில், 9.12.2025 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். 2002 மற்றும் 2025ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல்களில், தங்களது பெயர் அல்லது தங்களது உறவினர் பெயர் குறித்த விபரங்களை elections.tn.gov.in/ElectoralRolls.aspx என்ற இணையதளத்தின் வாயிலாக அறிந்து கொள்ளலாம். அதுமட்டுமன்றி, https://voters.eci.gov.in என்ற வலைதள முகவரியின் வாயிலாகவும் வாக்காளர் சுய விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

எனவே, தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியலை 100 சதவீதம் சரியாக தயாரிப்பதற்கும், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களது கள விசாரணையின் போது பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும்.

மேலும், பொதுமக்கள் இவ்வாய்ப்பினை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.



■ மதுரை மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண்.75 வி.வி.கிரி சாலையில் மத்திய தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டிடத்தை தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் குத்துவிளக்கேற்றி பயன்பாட்டிற்கு திறந்துவைத்தார் அருகில் மாமன்ற உறுப்பினர் பாண்டிசெல்வி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடன் உள்ளனர்.

மாலை தந்தி

செவ்வாய்கிழமை 11.11.2025



## மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் சார்பில் நிறுவனத் தலைவர் ராஜேஷ் ஆலோசனையின்படி நடந்த ஆலோசனை கூட்டம்

திருப்பூர், நவ.11-

மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் சார்பில் நிறுவனத் தலைவர் ராஜேஷ் ஆலோசனை யின்படி நடந்த ஆலோ சனை கூட்டத்தில் திருப்பூர் மாவட்டம் தாராபுரம் தாலுக்காவில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்க ப்பள்ளி உள்ள தலைமை ஆசிரியர் அவர்கள் குழந்தை களின் பொருள் களை வைப்பதற்கு ஒரு பீரோ நம்ம அமை ப்பிடம் கேட்டு உள்ளார்கள் அதை நம் மனதில் உள்ள பொறுப் பாளர்கள் உதவியால் வரும் குழந்தைகள் தினம் அன்று 14/11/2025 வெள்ளிக்கிழமை வெள்ளிக்கிழமை அன்று அமைப்பின் சார்பில் அனைவரும் இந்த பள்ளிக்கு சென்று பீரோவை வழங்கமாறு தீர்மானம் எடுக்கப்பட்டன இந்தக் கூட்டத்தில் அமைப்பின் பொதுச் செயலாளர் ஆதிலெட்சுமி ஆனந்தராஜ் மாநில ஆலோசகர் ராமன் மாநில பொருளாளர் பானுமதி மாநில மகளிர் அணி துணை ஆலோசகர் இஸ்வரி மாநில மகளிர் அணி மகளிர் அணி தலைவர் காந்திமதி மாநில மகளிர் அணி செயலாளர் திலகவதி மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் ரேவதி மாநில இளைஞர் அணி ஆலோசகர் ராஜாகுமர் மாநில மகளிர் அணி துணை ஒருங்கிணைப்பாளர் ராஜேஸ்வரி திருச்சி மாவட்ட இளைஞரணி தலைவர் பாலகிருஷ்ணன் திருச்சி மாவட்ட செயலாளர் கிருஷ்ணவேணி திருச்சி மாவட்ட அணி செயலாளர் சரவணன் திருச்சி மாவட்ட பொருளாளர் கீருஷ்டி திருச்சி மாவட்டம் மகளிர் அணி ஆலோசகர் செல்வி ற்றும் சதீஷ் வசந்தா கலந்துகொண்டனர்.



■ துரோணா உலகளாவிய பள்ளி நடத்திய Sparkle kids fiesta Season 1 மதுரை ஆனையூர். பள்ளிகளுக்கு இடையேயான போட்டியில் முதல் பரிசு பெற்ற பள்ளி ஸ்ரீ அரவிந்த மீரா யுனிவர்சல் பள்ளிக்கு தாளாளர் முனைவர் B.சரண்ராஜ் அவர்கள் கோப்பையும் நிர்வாக இயக்குநர்கள், முதல்வரும் இணைந்து தங்க காசு வழங்கினார்கள். மழலையர் பள்ளி பிரிவுகளுக்கான போட்டியில் முதல் பரிசு பெற்ற லட்சுமி கிட்ஸ் டிவிஎஸ் நகர் பள்ளிக்கு தாளாளர். முனைவர். B சரண்ராஜ் அவர்கள் கோப்பையும் நிர்வாக இயக்குநர்கள், முதல்வரும் இணைந்து தங்ககாசு வழங்கினார்கள்




■ தமிழ்நாடு ஓய்வூதிய பத்திரிகையாளர் நல சங்க செயற்குழு கூட்டம் மதுரை செய்தியாளர்கள் சங்கத்தின் முன்னால் செயலாளர் பன்னீர்செல்வம் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் நிறுவனத் தலைவர் ஜி கே ஸ்டாலின், தலைவர் பி ஆர் சுப்பிரமணியம், செயலாளர் பழனியா பிள்ளை, பொருளாளர் ஞானகுமார் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

## அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அங்கன்வாடி மையம் மற்றும் நியாயவிலைக்கடை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்



மதுரை, நவ.11-

மதுரை மாநகராட்சி மண்டலம் 3க்குட்பட்ட பகுதிகளில் மத்திய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய அங்கன்வாடி மைய கட்டிடம், நியாயவிலைக்கடை மற்றும் ஆழ்துளைகிணறு சின்டெக்ஸ் தொட்டியை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள் இன்று (10.11.2025) திறந்து வைத்தார்கள்.

மதுரை மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண்.54 பவர்ஹவுஸ் சாலையில் மத்திய சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.12 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாயவிலைகட்டிடம், வார்டு எண்.75 சொக்ககொத்தன் தெருவில் மாநகராட்சி பொதுநிதியிலிருந்து ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறு சின்டெக்ஸ் தொட்டி, வார்டு எண்.75 இரத்தினப்புரம் வி.வி.கிரி சாலையில் மத்திய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.13 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி கட்டிடங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள். மேலும் மண்டலம் 3 வார்டு எண்.75 ஜே.ஆர். சாலையில் ரூ.11 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாயவிலைக் கட்டிடத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி, கோதுமை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை வழங்கினார்கள்.

தொடர்ந்து எல்லீஸ்நகர் ஆர்.எம். மஹால் மற்றும் ஆரப்பாளையம் மேலப்பொன்னகரம் சீவிசிசி நடுநிலைப் பள்ளியில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் முயற்சியில் நடைபெறும் முதலமைச்சர் விரிவான காப்பீடு திட்ட சிறப்பு முகாமினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து பார்வையிட்டார்கள்.

இந்த நிகழ்வின்போது மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மகேஸ்வரன், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.பாண்டிச்செல்வி, திருமதி.நூர்ஜஹான், மதுரை மாவட்ட கூட்டுறவு பண்டகசாலை அலுவலர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்

## மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

இராமநாதபுரம், நவ.11-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடம் பல்வேறு கோரிக்கைகள் குறித்த 295 மனுக்கள் பெற்று மனுதாரரின் முன்னிலையில் மனுக்களை விசாரணை செய்து தொடர்புடைய அலுவலர்களிடம் மனுக்களை வழங்கி உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, தனிநபர் வீடு வழங்கும் திட்டம், குடிநீர் இணைப்பு வழங்குதல் உள்ளிட்டவை தொடர்பாக பொதுமக்கள் மனுக்களை அளித்தனர். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், ஒவ்வொரு வாரமும் பொதுமக்களிடம் பெறக்கூடிய மனுக்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு ஒருமாத காலத்திற்குள் மனுதாரர்களுக்கு உரிய தீர்வு வழங்கிட வேண்டும் எனவும், தீர்வு வழங்க முடியாத மனுக்கள் நிலை குறித்து மனுதாரர்களிடம் அலுவலர்கள் எடுத்துரைக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் பொதுமக்கள் வழங்கும் மனுக்களுக்கு துறைசார்ந்த அலுவலர்கள் சிறப்பு கவனம் எடுத்து செயல்பட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து தமிழ் வளர்ச்சித்துறையின் மூலம் பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், மகாத்மா காந்தியடிகள், ஜவஹர்லால் நேரு ஆகியோரின் பிறந்த தினத்தை முன்னிட்டு மாவட்ட அளவில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு நடைபெற்ற பேச்சுப்போட்டி, கவிதைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுச்சான்று மற்றும் பரிசுத்தொகைக்காண காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கி வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளை பாராட்டினார்.

## மண்ணிவாக்கம் பெரி கல்வி குழுமத்தின் சார்பில் நடைப்பெற்ற Peri Tech Expo 2025 நிகழ்ச்சியில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்







மண்ணிவாக்கம், நவ.11-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த மண்ணிவாக்கம் பெரி கல்வி குழுமத்தின் சார்பில் நடைப்பெற்ற Peri Tech Expo 2025 எனப்படும் புத்தாக்க கண்டுபிடிப்பு கண்காட்சி நடைப்பெற்றது. இதில் பெரி கல்வி நிறுவனங்களின் நிறுவனர் மாண்பமைத் தலைவர் சரவணன் பெரியசாமி, தலைமைச் செயல் அலுவலர் சசி வீரராஜன் ஆகியோர் தலைமை தாங்கினர்.

இதில் சிறப்பு விருந்தினர்களாக IIT Madras டீன் முனைவர் ஆர்.சாரதி, ஓய்வு பெற்ற திருச்சி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் முனைவர் கலியமூர்த்தி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு மாணவர்களின் புத்தாக்க கண்டுபிடிப்புகளை பார்வையிட்டனர்.

பெரி டெக் எக்ஸ்போ கண்காட்சியில் 80 பள்ளிகளைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டு தங்களுடைய அறிவியல் திறமைகளை வெளிப்படுத்தினார்கள்.

இதில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் ஐந்து இடங்களைப் பிடித்த வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பெரி கல்வி குழுமம் சார்பில் பாராட்டுச் சான்றிதழ், பதக்கங்களும் ரொக்க பரிசும் வழங்கி கௌரவித்தார்.

பெரி பொறியியல் தொழில்நுட்ப கல்லூரியின் முதல்வர் முனைவர் ஆர்.பால்சன் கென்னடி, அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் ஏ.புருஷோத்தமன், பொறியியல் தொழில்நுட்ப கல்லூரியின் துணை முதல்வர் பி.மகேஷ் மற்றும் துறைத்தலைவர்கள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவ மாணவிகள், ஏராளாமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




## மாதவரம் yoga 4U Wellness Centre – நோவா உலக சாதனை

மாதவரம், நவ.11-

உலக நீரிழிவு தினம் மற்றும் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு, மாதவரம் yoga4u wellness center குழந்தைகள் மற்றும் பெண்களின் ஆரோக்கியம், மற்றும் யோகாவின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் சிறப்பு யோகா நிகழ்ச்சி மற்றும் நோவா உலக சாதனை முயற்சி வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

நிகழ்வில் 4 வயது முதல் 16க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு, 30 நிமிடங்கள் தொடர்ந்து பல்வேறு யோகாசனங்களை சிறப்பாகச் செய்தனர். இந்த சாதனை நோவா உலக சாதனைப் பதிவகத்தால் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.

சாதனையாளர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக் கங்கள் வழங்கப்பட்டன. அவற்றை நோவா இந்திய இயக்குநர் திரு. திலீபன், நடுவர்கள் பிரபாகரன் மற்றும் சுகந்தன் வழங் கினார்.

இந்த நிகழ்ச்சியை யோகா நிபுணர், மூலிகை அறிவியல் வல்லுநர் மற்றும் யோகா விளையாட்டு வீராங்கனை டாக்டர் எஸ்.ஆர். கலைமதி திட்டமிட்டு நடத்தினார். அவரின் வழிகாட்டுதலில் மாணவர்கள் திறமையாகவும் ஒருமைப்பாட்டுடன் யோகாசனங்களை நிகழ்த்தினர். முதன்மை விருந்தி னராக இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகத்தின் (ICMR) முன்னாள் விளையாட்டு செயலாளர் திரு. தங்கராஜ் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார்.

திரு. திலீபன் மற்றும் திரு. தங்கராஜ் அவர்கள் யோகாவின் உடல் மற்றும் மன நலத்திற்கு முக்கியத்துவம், குறிப்பாக குழந்தைகள் மற்றும் பெண்கள் ஆகியோருக்கான பயன்பாடு குறித்து உரையாற்றி, யோகாவை வாழ்வின் ஒரு அத்தியாவசிய அம்சமாக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

மாதவரம் Yoga 4U Well-ness Centre சமூகத்தில் குழந்தைகள் மற்றும் பெண்களின் முழுமையான நலனுக்காக யோகா வழி ஆரோக்கிய வாழ்வை ஊக்குவித்து வருகிறது.

## மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி தலைமையில் சேலம் மாவட்டம், கோரிமேடு, ஸ்ரீ வெங்கடேஸ்வரா நகரில் உள்ள அன்புச்சோலை மையத்தில் நிகழ்ச்சி நடைபெற்றது






சேலம், நவ.11-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்து வதற்காக, "அன்புச்சோலை முதியோர் மனமகிழ் வள மையம்" என்ற திட்டத்தை திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி தலைமையில், மாநகராட்சி மேயர் திரு.ஆ.இராமச் சந்திரன் அவர்கள் முன்னிலையில் சேலம் மாவட்டம், கோரிமேடு, ஸ்ரீ வெங்கடேஸ்வரா நகரில் உள்ள அன்புச்சோலை மையத்தில் நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ்நாட்டிலுள்ள மூத்த குடிமக்களின் நலன் கருதி 13 மாவட்டங்களில் 25 இடங்களில் பகல் நேர பராமரிப்பு மையமான "அன்புச்சோலை மைய ங்கள்" தொடங்கப்படும் என பட்ஜெட் கூட்டத்தொடரில் அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திருச்சி மாவட்டத்தில் அன்புச்சோலை மையம் துவக்கி வைக்கப்பட்டது. சேலம் மாவட்டத்தில் சூரமங்கலம் மற்றும் கோரிமேடு பகுதியில் அன்புச்சோலை மையங்கள் துவக்கி வைக்கப் பட்டுள்ளது. பகல் நேரத்தில் முதியவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் ஆதரவான சூழலை உறுதி செய்வதற்காகவும், முதியோர்கள் தங்களது சம வயதினருடன் பழகுவதற்கான வாய்ப்பை வழங்குவதற்காகவும், பகல் நேரத்தில் தனிமையில் அவதிப்படும் முதியவர்களுக்கு ஆறுதல் அளிக்கவும், மூத்த குடிமக்களிடையே சமூக தொடர்புக்கான சூழலை உருவாக்குவதையும் நோக்கமாக கொண்டு அன்புச்சோலை மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

அன்புச்சோலை மையம் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை செயல்படும். மதிய உணவு மற்றும் மாலை நேர சிற்றுண்டி வழங்கப்படும். தகுதிவாய்ந்த பராமரிப்பாளர்கள், சமூகப்பணியாளர்கள் மற்றும் உடல் நல சிகிச்சையாளர்கள் மூலம் ஆரோக்கியத்திற்கான வசதிகள் வழங்கப்படும். தொலைக்காட்சி, தினசரி நாளிதழ்கள், மாத இதழ்கள், ஆன்மீக புத்தகங்கள், நாவல்கள், சிறுகதைகள், அறிவியல், இயற்கை புத்தகங்கள், சுகாதாரம், மற்றும் மருத்துவ புத்தகங்கள், உள்ளடங்கிய நூலக வசதி ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளது..

மேலும், யோகா மற்றும் உடற்பயிற்சி வசதிகள் மற்றும் கைவினைப்பொருட்கள், குழு விவாதங்கள் போன்ற பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்கள், விளையாட்டு சாதனங்கள் வழங்கப்படும். முதியோர்களுக்கான மருத்துவ பரிசோதனைக்கு அருகில் உள்ள நகர்புற ஆரம்ப சகாதார மையங்கள் மூலமாக மருத்துவ சேவைகள் வழங்கப்படும். சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், காற்றோட்டமான இடவசதி, சுத்தமான கழிவறை மற்றும் கண்காணிப்பு கேமரா வசதிகள் ஆகியவையும் அன்புச்சோலை மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி துணை மேயர் திருமதி சாரதாதேவி, மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி கார்த்திகா, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலர் திருமதி சுகந்தி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் (பொ) திரு.ம.சைமன்ராஜ் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161